## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.11/2022

2025 –ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 18.08.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. மலர்கொடி (PW– ) | வயது | : | 61 /2025 |
| த/க பெயர் | : | திரு. முருகையன் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| முகவரி | | திருமக்கோட்டை | வட்டம் | : | மன்னார்குடி |

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அ அட்டவணை சொத்தானது எனது குடும்பத்தின் பூர்வீக சொத்து என்று வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ அட்டவணை சொத்தானது எனது அப்பா சிங்காரவேலுக்கு எவ்வாறு கிடைத்தது என்று எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் தெரியவில்லை. அ அட்டவணை சொத்தானது எனது அப்பா சிங்காரவேலுக்கு சொந்தமான சொத்து என்பதற்கான பதிவு ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.
2) அ அட்டவணை சொத்தானது எனது அப்பா சிங்காரவேலுக்கு சொந்தமான சொத்து என்பதன் அடிப்படையில் அவர் வாரிசுகள் அனைவருக்கும் உரிமை உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ–1 ஆவணமான 23.12.2004 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை முத்துலெட்சுமி, ஜெகதீசன், சாந்தகுமாரி ஆகிய மூவர் மட்டும்தான் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனது அப்பாவின் மற்ற வாரிசுதாரர்களான பூங்கோதை, ராணி, ராஜேஷ்வரி ஆகியோர் பாகப்பிரிவினை பத்திரத்தில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான்.
3) எனது அப்பாவின் மற்ற வாரிசுதாரர்களான பூங்கோதை, ராணி, ராஜேஷ்வரி ஆகியோர்களை மறைத்து பாகப்பிரிவினை பத்திரம் எழுதப்பட்டது சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல. இந்த உண்மை விபரங்களை மறைத்து

எழுதப்பட்ட வா.சா.ஆ.1ஆவணத்தின் படி கோரியுள்ள வசதி உரிமை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆ அட்டவணை சொத்தானது யாருக்கு சொந்தமானது என்று வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அரசுக்கு சொந்தமானது என குறிப்பிட்டுள்ளேன்.

4) ஆ அட்டவணை சொத்தில் பிரதிவாதிகளுக்கு உரிமை இல்லை என்பது தான் எனது கட்சி என்றால் சரிதான். ஆ அட்டவணை சொத்தில் பழைய புல எண்.96, புதிய புல எண்.96/1 ஆகியவை பிரதிவாதிகளின் பெயரில் பட்டா உள்ளது என்றால் மோசடியாக பட்டா பெறப்பட்டது. எனது தரப்பில் தாக்கல் செய்யபபட்டுள்ள ஆவணம் ஆ அட்டவணை சொத்தானது பாதை என்பதை காட்டக்கூடிய ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஆ அட்டவணை சொத்தினை 30 ஆண்டுகளாக பாதையாக பயன்படுத்து வருகிறேன் என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

5) ஆ அட்டவணை சொத்தானது பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்து என்றும் அதில் பாதை இருப்பதாகவும், அதை நான் பயன்படுத்தி வருவதாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆ அட்டவணை சொத்தானது பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்தில் வசதி உரிமை கோரி எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

6) மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் நான் கோருகின்ற பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.21 15:39:53 +0530

District Munsif

Mannargudi.